සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
Sabaragamuwa Provincial Department of Education

| | |
|---|---|
| **පළමු වාර පරීක්ෂණය 2018** | **11 ශ්‍රේණිය** |
| முதலாம் தவணைப் பரீட்சை **2018** | தரம்11 |
| **First Term Test 2018** | **Grade 11** |

| | | |
|---|---|---|
| දෙමළ භාෂාව හා සාහිත්‍යය | **I** | පැය එකයි |
| **தமிழ் மொழியும் இலக்கியமும்** | **I** | **ஒரு மணித்தியாலம்** |
| **Tamil Language & Literature** | **I** | ***One hour*** |

***கவனிக்க வேண்டியவை***

- ***எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.***
- ***1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.***

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. ‘‘பொங்கி எழுந்த கொழுங்கனலென்ன’’ இங்கு ‘‘கனல்’’ என்பது

    1. காற்று 2. நெருப்பு 3. நெய் 4. நீர்

02. ‘‘கொங்கர்க் கமராபதியளித்த கோவே’’ இங்கு ‘‘அமராபதி’’ என்பது

    1. வயல் 2. கானகம் 3. விண்ணுலகம் 4. கடல்

03. குன்று அனைய திருநெடுந் தோள்குகன்’’. இதில் ‘‘குன்று’’ என்பதன் எதிர்ப்பதம்

    1. வரை 2. மலை 3. குழி 4. சிகரம்

04. ‘‘கண்கள் பின்னழ கார்த்து களித்திட’’ இதில் ‘‘களித்தல்’’ என்பதன் எதிர்ச் சொல்

    1. வாடல் 2. மகிழ்தல் 3. காத்தல் 4. புகழ்தல்

05. வேதம் மூன்றும் பலாவுள்ள நாடு – வேதம் மூன்றும் என்பதனுள் அடங்காதது

    1. வேர் 2. காய் 3. மரம் 4. பயன்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு நடாத்தப்படும் செமினார்களுக்கு (Seminar) கட்டாயம் சமூகமளிக்க வேண்டும். இங்கு ‘‘செமினார்’’ என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல்

    1. கருத்தரங்கு 2. மதிப்பீடு 3. கேள்வி 4. ஊடகம்

07. பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு

    1. உரையாடல் - மேடைப் பேச்சு 2. செய்யுள் - பா
    3. கட்டுரை – வியாசம் 4. திருமுகம் - கடிதம்

08. ‘‘மறுகா’’ எனும் பேச்சு வழக்கு மொழிச் சொல் எப்பிரதேச வழக்கு

    1. வடக்கு 2. கிழக்கு 3. மேற்கு 4. தென்னிலங்கை

09. மாலை, அம்பு, பாணம் என்னும் பல பொருள் தரும் சொல்

1. வில் 2. சரம் 3. நாண் 4. கயிறு

10. பெண் ஆடு 'மறி' எனப்படுவது போல பெண் புலியைக் குறிக்கும் சொல்

1. குண்டு 2. பெட்டை 3. பிணை 4. பிணா

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

11. "காது கொடுத்தல்" எனும் மரபுத் தொடரின் பொருள்

1. ஏமாற்றுதல் 2. அவதானித்துக் கேட்டல்

3. கோள் சொல்லுதல் 4. இரகசியம் கூறல்

12. துன்பம் தரும் ஒன்றைச் சகித்துக் கொண்டிருத்தல் எனும் பொருள் தரும் மரபுத் தொடர்

1. வாலாட்டுதல் 2. வயிறு கழுவுதல் 3. பல்லைக் கடித்தல் 4. வாய்பூட்டு போடுதல்

13. "கணினிகள் இயங்கியது" என்பதில் இடம் பெற்றுள்ள வழு.

1. இட வழு 2. எண் வழு 3. பால் வழு 4. திணை வழு

14. வரையின்றி வாரி வழங்குபவன்

1. வள்ளல் 2. உலோபி 3. ஊதாரி 4. கருமி

15. நெருப்பில் விழுந்த தேள் எடுத்தவனையே கொட்டும் என்ற பழமொழி தரும் உட்பொருள்

1. தேள் நெருப்பில் விழுந்து விட்டால் அதனைக் காப்பாற்றக் கூடாது

2. தீயவனானாலும் ஒருவன் செய்த நன்றியை மறக்க கூடாது

3. தீயவனுக்கு நன்மை செய்யப் போய் ஆபத்தை விலைக்கு வாங்குதல்

4. நெருப்பில் வீழ்ந்த தேள் வேதனையில் எடுத்தவனையே கொட்டிவிடும்

16. 'கடினமான காரியமாயினும் அதை மீண்டும் மீண்டும் செய்ய முயன்றால் வெற்றி பெறலாம்' என்ற கருத்தை தரும் பழமொழி

1. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

2. அடுத்து முயன்றாலும் ஆகு நாளே ஆகும்

3. ஆரிய கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு

4. பதறாத காரியம் சிதறாது

17. அபூர்வமாக நடைபெறும் நிகழ்வைக் குறிக்கப் பொருத்தமான உவமைத் தொடர்

1. ஆண்டிகள் மடம் கட்டியது போல

2. கரடி கார்த்திகைப் பிறை கண்டது போல

3. தேடிய பூண்டு காலில் அகப்பட்டது போல

4. அன்னைக்கு உதவாதவன் யாருக்கும் ஆகான்.

18. 'வாழையடி வாழையாக' என்ற அருஞ்சொற்றொடரால் உணர்த்தப்படுவது

1. நன்றியுணர்வு 2. மாற்றமின்மை

3. பாரம்பரியத் தொடர்ச்சி 4. உபகாரத் தன்மை

19. கோவலன் கொலையுண்டதைக் கேட்ட கண்ணகி துடிதுடித்தாள். இங்கு “ துடி துடி” என்பது

1. இரட்டைக் கிளவி 2. அடுக்குத் தொடர் 3. இணைமொழி 4. அடுக்கிடுக்குத்தொடர்

20. “ அவனோ திருடன்” இங்கு ஓகார இடைச் சொல் உணர்த்தும் பொருள்

1. ஒலியோசை 2. எதிர்மறை 3. வினா 4. தெரிநிலை

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. பின்வருவனவற்றுள் பகுபதம்

1. ஊர் 2. வேனில் 3. நீர் 4. கூனி

22. வேற்றுநிலை மெய்மயக்கம் இடம் பெற்ற சொல்

1. நரம்பு 2. தண்ணீர் 3. பட்டம் 4. வித்து

23. பின்வருவனவற்றுள் பெயரெச்சம்

1. வினையடி 2. மலர்ந்த 3. ஆடி 4. எழுதி

24. நான்காம் வேற்றுமை உருபேற்ற தொடர்

1. இன்றோடு பத்து நாள் ஆகிறது 2. வீட்டைக் கட்டினான்
3. மலை வீழ் அருவி 4. கூலிக்கு வேலை செய்தான்

25. பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சி

1. தேனினிது 2. பசும் பால் 3. பொன்னாரம் 4. கடலலை

26. தொடர்ந்து வரட்சி நிலவி வருகின்றது.

பயிர்கள் செழித்து வளர்ந்தன

மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் இணைப்பதற்கு பொருத்தமான இணைப்பிடைச் சொல்

1. ஆகவே 2. எனவே 3. எனினும் 4. ஆகையால்

27. வேகமாக ஓடியவனைக் கண்டேன். இங்கு “ஓடியவனை” என்பது

1. வினையாலனையும் பெயர் 2. வினைமுற்று
3. தொழிற்பெயர் 4. பெயரெச்சம்

28. அகர ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி

1. தண்ணீர், தீமை, தூரம், துன்பம் 2. நாடு, நீதி, நன்மை, நுங்கு
3. பாட்டு, மூர்க்கம், ஏற்றம், உப்பு 4. மாலை, மீட்சி, மேளம், மௌனம்

29. பொருத்தமற்ற உதாரணம் இடம் பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.

1. வினை முற்று – படித்தான், வந்தான், சென்றான்

2. ஏவல் வினை – படி, போ, ஓடு

3. வியங்கோள் வினை- வாழ்க, தருக, வாழி

4. பிறவினை – படிப்பித்தான், எழுதினான், வருவித்தான்

30. 1. வேற்றுமைத் தொகை – மீன் சந்தை, குளக்கரை, கண்ணீர்
   2. வினைத்தொகை - கொள்கலன், ஏவுகணை, பொழிகதிர்
   3. உம்மைத் தொகை - இரவு பகல், தாமரைக்கை, எண்ணெழுத்து
   4. பண்புத் தொகை – கரும்பலகை, வட்டமேசை, செவ்வானம்

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. வறியவருக்கு உண்டியும் உறையுளும் கொடுத்து ஆதரிக்கும் இடம் …………………… ஆகும்.
   1. ஆதுலர் சாலை 2. அன்னசாலை 3. மடம் 4. ஆச்சிரமம்

32. மேடையில் கலாசார நிகழ்ச்சிகள் ……………………………
   1. அறங்கேறின 2. அரங்கேறின 3. அரங்கம் ஏரின 4. அறங்கம் ஏறின

33. பணத்தையோ பொருளையோ பெற்றுக் கொண்டதை உறுதிப்படுத்தும் பத்திரம் ………………… எனப்படும்.
   1. திருவுளச் சீட்டு 2. காசோலை 3. பற்றுச் சீட்டு 4. கடவுச் சீட்டு

34. பாராளுமன்றத்தில் அரசியல் அமைப்பின் பத்தொன்பதாவது …………………… நிறைவேற்றப்பட்டது.
   1. உடன்படிக்கை 2. சுற்று நிருபம் 3. திருத்தச் சட்டம் 4. வேட்புமனு

- **பின்வரும் வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35. செம்மொழியாம் தமிழ் மொழி தமிழ் மாந்தர்களால் மாத்திரமன்றி
   1. பிறரும் விரும்புகின்றார்கள் 2. பிறர் விரும்புகின்றார்கள்
   2. பிறரால் விரும்பப்படுகின்றது 4. பிறராலும் விரும்பப்படுகின்றது

36. நீங்கள் முயன்று பயிற்சி செய்ததனாலன்றோ நன்றாகப்
   1. பாடுவோம் 2. பாடுகிறீர்கள் 3. பாடுவீர்கள் 4. பாடுகிறீர்

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

சுட்டும் விழிச்சுடர்தான் - கண்ணம்மா
சூரிய சந்திரரோ
வட்டக்கரிய விழி – கண்ணம்மா
வானக் கருமை கொலோ
பட்டு கரு நீலப் - புடவை
பதித்த நல் வயிரம்
நட்ட நடு நிசியில் - தெரியும்
நட்சத்திரங்களடீ

37. விழிகள் எவ்வாறு சுடர் விடுவதாக குறிக்கப்படுகிறது
   1. நட்சத்திரங்களும் சூரியனும் போல் 2. சூரியனும் சந்திரனும் போல்
   3. சந்திரனும் நட்சத்திரங்களும் போல் 4. வயிரமும் நட்சத்திரங்களும் போல்

38. ஆடையில் பதித்த மணிகள் எதுவாக உருவகிக்கப்பட்டுள்ளது

1. சூரியன் 2. சந்திரன் 3. வயிரம் 4. நட்சத்திரம்

39. இப்பாடலின் கருத்துக்குப் பொருத்தாத கூற்று

1. விழிகள் கரிய மேகமாக குறிப்பிடப்படுகிறது.
2. புடவை கரு நீல நிறமாக உள்ளது
3. கண்ணம்மா சூரியனையும் சந்திரனையும் வணங்குகிறாள்.
4. நட்சத்திரங்கள் நடு நிசியில் தென்படுகின்றன.

கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும். அதற்கேற்ப பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40. அ) அவ்விலக்கினை அடைவதற்கு முதற்படியாக அமைவது தான் செய்யுட் பொருள் விளக்கம்

ஆ) இவ்வாறு பகுத்து விளக்கும் பொழுது செய்யுளிலே கருத்தோ உணர்ச்சியோ எடுத்துரைக்கப்படும் முறைமையும் தெரிய வரும்

இ) செய்யுள்களின் கருத்தை அறிந்து கொள்வதற்கு பரிச்சயமற்ற மொழி நடையை பகுத்தறிய வேண்டும்.

ஈ) உண்மையான செய்யுள் நயப்பின் இலக்கு அதுவேயாகும்

1) ஆ, இ, ஈ, அ 2. இ, ஈ, அ, ஆ 3. இ, ஆ, ஈ, அ 4. அ, இ, ஆ, ஈ